26.06.2025 MCOP No.82/2021

சாட்சி : PW 1 ராஜபாண்டி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. விபத்து நடந்த சாலையானது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் சாலை என்றால் சரிதான். Ford Fiesta கார் எனக்கு முன்னால் சென்றது என்றால் இல்லை. நான் தான் முன்னால் சென்று கொண்டிருந்தேன். Ford Fiesta கார் பின்னால் நான் சென்று கொண்டிருந்தேன் என்றும், அந்த காரை முந்தி செல்ல முற்பட்டதால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்தின்போது நான் கெல்மெட் அணியவில்லை என்று சொன்னால் சரியல்ல. கெல்மெட் அணிந்திருந்ததாக போலிஸ் விசாரணையிலும், மனுவிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

2. எனக்கு பின்னால் அமர்ந்து வந்தவர் பேர் என்னவென்றால் முருகன் ஆகும். விபத்து சமயத்தில் அவருக்கு காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை. மேற்படி விபத்து 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் விபத்து ஏற்படவில்லை என்றும், எனது அஜாக்கிரதையால்தான் ஏற்பட்டது என்பதால் 3ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் முழுமையாக சரியாகிவிட்டது என்றால் இல்லை. தற்போது வரையில் நான் சிகிச்சை எடுத்து வருகிறேன்.

3. எனக்கு இருசக்கர வாகனத்திற்கான ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது. அதை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தற்போது வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று வருவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன், அது என்ன ஆவணம் என்றால் மெடிக்கல் பில் ஆகும். இதே சிகிச்சை அரசு மருத்துவமனையிலும் கிடைக்கும் என்றால் சரிதான். நான் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருந்தால் நான் முற்றிலும் குணம் அடைந்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. நான் இந்தஸ்இந்த் வங்கியில் நிரந்தரமாக

பணிபுரிகிறேன் என்றால் இல்லை. ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிகிறேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.எஸ்,சி (கம்பியூட்டர் சயின்ஸ்) படித்துள்ளேன்.

4. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.1 ஆவணம் ஆனது இந்தஸ்இந்த் வங்கியில் இருந்து பெறப்பட்ட ஆவணம் இல்லை என்றும், இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.10 ஆவணம் இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக என்னால் உற்பத்தி செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீட்டு தொகை மிகைப்படுத்தி கோரியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)– திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.